# அரசாங்க அறிவித்தல்

## 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

### 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறு, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 அ பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், மங்கள சமரவீர ஆகிய நான், இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களினால் 100% தீர்வை / வரிச் சலுகை அடிப்படையில் இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் விற்பனை அல்லது அகற்றுதல் தொடர்பில் செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையினை தீர்மானிப்பதற்கான ஒரு வழிமுறையாக் கொள்ளப்படுதல் வேணடுமெனவும்,

இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களினால் 100% தீர்வை / வரி சலுகை அடிப்படையில் இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை விற்பனைசெய்கையில் அல்லது அகற்றுகையில் அவற்றுக்கு செலுத்தத்தக்க அரசிறை அறவீடுகளானவை, அத்தகைய வாகனங்களின் பயன்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு, குறித்த வாகனம் இறக்குமதி செய்யப்படுகையில் செலுத்தத்தக்க உற்பத்தித்த தீர்வையின் சதவீதமாகக் கொள்ளப்படுதல்வேண்டுமெனவும்,

முதற் பதிவுத் திகதியிற்கும் மற்றும் குறித்த வாகனத்தின் விற்பனை அல்லது அகற்றல் திகதியிற்கும் இடைப்பட்ட காலம் அந்த வாகனத்தின் பயன்பாட்டுக் காலத்தினைக் கணிப்பீடுசெய்வதற்கான காலமாகவும், 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் குறித்த இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களினால் இறக்குமதிசெய்யப்பட்டு அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டு குறித்த இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களின் பெயரிலேயே பதிவுசெய்யப்பட்டு விற்பனைசெய்யப்படுகையில் அல்லது அகற்றுகையில், இக்கட்டளையானது ஏற்புடமையாக்கிக்கொள்ளப்படுதல் வேண்டும் எனவும், இக்கட்டளை மூலம் நான் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,

கொழும்பு 01,

2018 ஆம் ஆண்டு 05 மாதம் 15 ஆந் திகதி

**அட்டவணை**

| **இராஜதந்திரி / இராஜதந்திர அமைப்பினால் முதற் பதிவுத் திகதி முதல் பயன்படுத்தப்பட்ட காலம்** | **உற்பத்தித் தீர்வை வீதம்** |
|---|---|
| 01 வருடத்திற்குமேற்படாதவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 85% |
| 01வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 02 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்கு சமமாவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 75% |
| 02 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 03 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்கு சமமாவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 65% |
| 03வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 04 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்கு சமமாவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 55% |
| 04 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்கு சமமாவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 45% |
| 05 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 06 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்கு சமமாவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 35% |
| 06 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 07 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்கு சமமாவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 25% |
| 07 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 08 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்கு சமமாவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 15% |
| 08 வருடங்களுக்கு மேற்பட்டவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 10% |